(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 9 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : கணேசன்

Husband's/ Father's name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11.1.2018

மு வி ---

நான் தற்போது உசிலம்பட்டியில் குடியிருக்கிறேன். உசிலம்பட்டியில் கண்ணாடி கடை வைத்துள்ளேன். இறந்த மணி எனக்கு சகலை. 28.2.17 ம்தேதியன்று எனது சகலபாடி மணி இறந்தார் என கேள்விபட்டு மதுரை ஆணையுருக்கு வந்தேன். எனது சகலபாடியை லாவன்யாவும் ராஜேஸ் சேர்ந்து

கொலை செய்து விட்டதாக தகவல் அறிந்து ராஜேஷ் வீட்டிற்கு வந்தேன். மணி ரத்த காயத்துடன் ராஜேஷ் வீட்டில் பாத்ரூம் முன்பு பிணமாக கிடந்தார். போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் தயாரித்தார். நானும் என் மாமா முத்துபாண்டியும் பார்வைமகசரில் கையெழுத்து போட்டோம். பார்வைமகசர் அசாஆ 10. ரத்தக்கறை படிந்த சிமிண்ட் தரை கொஞ்சம் எடுத்தனர். ரத்தம்படாத சிமிண்ட் தரை எடுத்தனர். உடைந்த நிலையில் உள்ள பிளாஸ்டிக் சேரின் கால் பாகம் (துண்டு )எடுத்தனர். 2 டொரினா காலி பாட்டில்களை எடுத்தனர். அதற்காக அத்தாட்சியில் கைப்பற்றினர். அந்த அத்தாட்சி அசாஆ 11. ரத்தம் படிந்த சிமிண்ட் தரை சாபொ 5. ரத்தம்படாத சிமிண்ட் தரை சா பொ 6. உடைந்த பிளாஸ்டிக் புளூ கலர் சேரின் கால் பாகம் சா பொ 7. 2 டொரினோ பாட்டில்கள் சா பொ 8. இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தனர்.

கு வி -- எதிரிகள் தரப்பில்

இல்லை.